





# மென்பொருள் வளர்ச்சியில் கோவை மாநகர்!

## விளாங்குறிச்சி தகவல் தொழில்நுட்பக் கட்டிடம்!

**திராவிட மாடல் அரசு**

103

ர.பிரகாசு

'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி....

சென்னை மாநகரின் தரமணியில் முத்தமிழறிஞர் கலைஞர் முதல் டைடல் பூங்காவை அமைத்தவுடன், இரண்டாவது டைடல் பூங்காவுக்கு அவர் தேர்வு செய்த இடம் கோவை. ஏனென்றால், சென்னைக்கு அடுத்து தமிழ்நாட்டின் இரண்டாவது பெரிய நகரமாக, கல்வி- தொழிலில் வேகமாக வளரும் நகரமாகத் திகழ்வது கோவை. அதனால், கோவையில் மென்பொருள் பூங்கா அமைக்க வேண்டுமென்று 2000- ஆம் ஆண்டின் தொடக்கத்தில் கலைஞருக்கு ஏற்பட்ட எண்ணத்தை, 2006-இல் அடிக்கல் நாட்டி, 2010-இல் திறந்துவைத்து நனவாக்கினார்.

கலைஞரின் இம்முயற்சியால், தகவல் தொழில்நுட்பத் துறையில் தமிழ்நாட்டின் இரண்டாவது பெரிய நகரம் என்ற அடையாளத்தைப் பெற்றிருக்கிறது கோவை. முதலீட்டாளர்களை வாரி அணைத்து, கோவையின் மென்பொருள் வளர்ச்சியை பெருக்கியிருக்க வேண்டிய தருணத்தில், 10 ஆண்டுகளைப் பாழாக்கியது, பிந்தைய அ.தி.மு.க. அரசு. 2020-ஆம் ஆண்டில் அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் கோவையில் இருந்த புத்தாக்கத் தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை வெறும் 271. ஆனால் மூன்றாண்டு கால திராவிட மாடல் ஆட்சியில் இதன் எண்ணிக்கை 1,350-ஆக அதிகரித்துள்ளது. இதில் பெரும்பாலான புத்தாக்க நிறுவனங்கள் தகவல் தொழில்நுட்பத்துறையைச் சார்ந்து செயல்படுபவை. இன்றைய கோவையில் தொழில்நுட்ப நிறுவன அலுவலகங்களுக்கான தேவை சுமார் 7 லட்சம் சதுர அடி அளவுக்கு இருக்கிறது.

### திராவிட மாடலில் திருப்பம்!

மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்துவதில் தகவல் தொழில் நுட்பத்துறையின் திறனை உணர்ந்து, விரைவான தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு உகந்த வணிகச் சூழலை திராவிட மாடல் அரசு உருவாக்கி வருகிறது. இதன்மூலம் பன்னாட்டுத் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் தமிழ்நாட்டில் முதலீடு செய்யவும், தமிழ்நாட்டு இளைஞர்களின் திறன்களைப் பயன்படுத்திக் கொள்ளவும் பேரார்வம் காட்டுகின்றன. அதற்கு உறுதுணையாக, தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலங்களை உருவாக்குதல், கிராமம் மற்றும் நகர மக்களிடையே தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதில் உள்ள இடைவெளியைப் போக்குதல், தமிழ்நாட்டைத் தகவல் தொழில்நுட்ப மின் ஆளுமையில் சிறந்த மாநிலமாக மாற்றுதல், மென்பொருள் ஏற்றுமதியை அதிகரித்தல் போன்ற பணிகளைச் செயல்படுத்தி வருகிறது தமிழ்நாடு மின்னணு நிறுவனம்.

இந்த தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மூலமாக, கோவை மாவட்டம், விளாங்குறிச்சியில், 158 கோடியே 32 லட்சம் ரூபாய் செலவில், 2.94 லட்சம் சதுர அடி பரப்பளவில் புதிய தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தை தி.மு.க. அரசு கட்டியது. இந்த தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தை, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 2024-ஆம் ஆண்டு நவம்பர் ஐந்தாம் தேதி திறந்துவைத்தார்.

### ஏற்படுத்தப்பட்ட வசதிகள்

இந்த தகவல் தொழில்நுட்பக் கட்டடம் சிறிய, நடுத்தர மற்றும் பெரிய நிறுவனங்களுக்கு



பத்தாண்டுகளில் தமிழ்நாட்டின் மென்பொருள் துறையின் முகமாகத் திகழப்போகிறது மான்செஸ்டர் நகரம். அந்த முகத்திற்கு இப்போதிருந்தே வடிவம் கொடுக்கிறது, திராவிட மாடல் அரசு.

இடம் அளிக்கக்கூடிய வகையில் ஒருங்கிணைந்த கட்டட மேலாண்மை அமைப்பைக் (IBMS) கொண்டுள்ளது. இரண்டு அடித்தளங்களில் வாகனங்கள் நிறுத்துமிடம் அமைக்கப்பட்டுள்ளது. தரை மற்றும் அதற்கு மேலுள்ள ஐந்து தளங்களில் தகவல் தொழில்நுட்ப அலுவலகத்துக்கான இடவசதி செய்யப்பட்டுள்ளது. 8 மின்தூக்கிகள், தீயணைப்பு வசதிகள், தொலைத்தொடர்பு வசதிகள், மழை நீர்ச் சேகரிப்பு வசதிகள், 72 மணி நேரம் ஜெனரேட்டர் இயக்கத்துக்காக 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட டீசல் சேகரிப்புத் தொட்டி, ஆறு லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட நிலத்தடி நீர்த்தொட்டி, 1.35 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, 130 கிலோ லிட்டர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் போன்ற பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

முதல் நாளிலேயே பல்வேறு நிறுவனங்களுக்கு அலுவலகம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஆணைகள் வழங்கப்பட்டன. சென்னை, கோவையில் இயங்கும் மற்ற தகவல் தொழில்நுட்ப பூங்காக்களைப் போலவே, விளாங்குறிச்சி தகவல் தொழில்நுட்பப் பூங்காவும் அடுத்த சில ஆண்டுகளில் முழுவீச்சில் செயல்பாட்டுக்கு



வரும். அப்போது 3 ஆயிரத்து 500 பட்டதாரிகளின் வாழ்வாதாரத்தைப் பேணும் பணியிடமாக இந்த தகவல் தொழில்நுட்பக் கட்டடம் உருவெடுத்திருக்கும்.

### புதிய வாய்ப்புகள்!

கொரோனா பேரிடருக்குப் பிறகு சர்வதேச தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் பார்வை கோவையை நோக்கித் திரும்பியுள்ளது. இந்தியாவின் சிலிக்கான் வேலியாகத் திகழும் பெங்களூரு காலநிலை மாற்றத்தால் சந்திக்கும் சவால்களுக்கு மாற்றுத் தீர்வாகவும் கோவை மாநகரம் உள்ளது. சென்னை சந்திக்கும் பெருமழையும் கோவைக்கு அரிதுதான். சென்னை, பெங்களூரு நகரங்களை ஒப்பிடுகையில், வாடகை, வாழ்வாதாரச் செலவுகளும் கோவையில் கொஞ்சம் குறைவுதான். போக்குவரத்து நெரிசலும் ஒப்பீட்டளவில் இந்த இரண்டு நகரங்களை விட குறைவே.

சர்வதேச விமானப் போக்குவரத்து வசதி, வளமான உள்கட்டமைப்பு வசதிகள், மேற்கு மாவட்டங்கள் முழுவதும் பரவி இருக்கும் கல்வி நிறுவனங்கள், அந்நிறுவனங்களில் இருந்து ஆண்டுதோறும் வெளிவரும் பல்லாயிரக்கணக்கான பட்டதாரி இளைஞர்கள், அடுத்த சில ஆண்டுகளில் அமையவிருக்கும் மெட்ரோ ரயில் வசதிகள் என சாதகமான அம்சங்கள் கோவைக்கு ஏராளம் உள்ளன. அதனால் தமிழ்நாட்டின் தகவல் தொழில்நுட்பப் புரட்சியில் தங்குதடையில்லாமல் தடம் பதிக்க அத்தனை வாய்ப்புகளையும் ஒருசேரக் கொண்டிருக்கிறது கோவை மாநகரம்.

எனவே, தற்போதுள்ள டைடல் பூங்காவிற்கு அருகிலேயே 17.17 ஏக்கரில் மேலும் ஒரு தகவல் தொழில்நுட்பப் பூங்காவை அமைத்திட முனைந்திருக்கிறது, திராவிட மாடல் அரசு. தனியார் தொழில்நுட்ப நிறுவனங்களுடன் இணைந்து இந்த பெருந்திட்டத்தைச் செயல்படுத்துவதன் வாயிலாக, சுமார் 36 ஆயிரம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் காத்திருக்கின்றன. இன்னும் பத்தாண்டுகளில் தமிழ்நாட்டின் மென்பொருள் துறையின் முகமாகத் திகழப்போகிறது மான்செஸ்டர் நகரம். அந்த முகத்திற்கு இப்போதிருந்தே வடிவம் கொடுக்கிறது, திராவிட மாடல் அரசு.

...சாதனை தொடரும்

## மனநோயாளிகளின் மறுவாசிப்பு'

பெரியாரை மறுவாசிப்பு செய்கிறோம் என அற்பத்தனத்தை வெளிக்காட்டியவர்கள் காட்டும் ஆதாரக் கட்டுரை, 'மேதமையுடன் எழுதப்பட்டிருக்கும் ஒன்று' என முகநூலில் பதிவிட்டுள்ளார் அரசியல் விமர்சகர் ராஜ்தேவ்.

"பல்வேறு சமூகங்களில் நிலவும் உறவுமுறைகளையும், அதற்குக் காரணமான கலாச்சார நெறிமுறைகளையும் மிக விரிவாக அந்த கட்டுரையில் பெரியார் விளக்குகிறார். பின்னர், அவர் இந்திய சமூக அமைப்பில் நிலவும் பல்வேறு உறவுமுறைகள் குறித்தும் கூடுதல் கவனத்துடன் விளக்குகிறார். இதில் எந்த ஒன்றையும் சிறப்பானதாக அவர் முன்வைக்கவில்லை.

இந்துச் சமூகத்தில் ஒரு ஆண், தனது சகோதரனுக்குப் பிறந்த குழந்தையைச் சொந்த பிள்ளையாகக் கருதுவதும், சகோதரிக்குப் பிறந்த குழந்தையைத் திருமண பந்தம் செய்யத்தக்கதாக நினைப்பதையும் கூறுகிறார். கேரளா முதல் திபெத் வரை மற்றும் முஸ்லிம், ஐரோப்பிய சமூகங்களில் நிலவும் உறவுமுறைகளை விளக்குகிறார். எந்த உறவுமுறையைக் கடைபிடிப்பது என்பதில், பகுத்தறிவுக்கு உட்பட்டு சமயோசிதமாக சிந்தித்து முடிவெடுக்க இறுதியில் கூறுகிறார்.

சமயோசிதம் என்ற சொல்லுக்கு முன்பாகவோ அல்லது பின்பாகவோ ஒரு ஆண் தனது தாய், மகளுடன் இச்சையைத் தீர்த்துக் கொள்ளலாம் என்பது போன்ற பொருள் தரும் சொல்லையோ, வாக்கியத்தையோ நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கூட சொல்லவில்லை. பெரியாரின் மேதமையான இந்தக் கட்டுரைக்கு இணையாக எங்கல்சின் கருத்துக்களைச் சொல்லலாம்.

'திருமணத்தை சட்டப்பூர்வ விபச்சாரம்' என்றவர் எங்கல்ஸ். மண்புழு மட்டும்தான் தன்னைத்தானே புணர்ந்து கற்பில் உயர்ந்து விளங்குகிறது என்றும் கூறியுள்ளார். இவ்வளவு சீர்மை கொண்ட பெரியாரின் கருத்துகளுக்கு மிக அற்பமான அர்த்தம் கற்பித்துவிட்டு பெரியாரை மறுவாசிப்பு செய்திருப்பதாக கூறுவது, மறுவாசிப்புக்கு உண்டான மரியாதைதான் என்ன மனநோயாளியே?" என்று கேள்வி எழுப்பி இருக்கிறார்

## :.ப்ளாஷ்பேக்



கவிஞர் தூயவன் (எ) ம.ஜ.சந்தீப்



### முன் அனுமதி பெறாமல் சந்திப்பு!

2010-ஆம் ஆண்டு பிப்ரவரி 17-ஆம் தேதி, என் பெற்றோர் ந.ஜம்புலிங்கம் - மகாலட்சுமி ஆகியோரின் மணநாளை முன்னிட்டு, தலைவர் கலைஞரிடம் வாழ்த்துப் பெற, சென்னை, கோபாலபுரம் இல்லத்துக்கு என் பெற்றோர் என்னையும் அழைத்துச் சென்றனர். தலைவர் வெளியில் சென்றுவிட்டு வந்தபோது, எங்களைப் பார்த்ததும் அருகில் அழைத்தார். "எங்களுக்கு திருமண நாள், உங்களிடம் வாழ்த்துப் பெற வந்தோம்" என்று அப்பா கூற, ஓரமாக இருந்த என்னைப் பார்த்து, "யார் அந்த பையன்" என்று வினவினார். "எங்களோட ஒரே பையன் தலைவரே" என்று அம்மா கூற "ஏன்யா ஒன்னோட நிறுத்திட்டீங்க" என்று பேசி புன்னகைத்ததுடன், "நல்லா படிக்கணும், வாழ்க!" என்று வாழ்த்தினார். முன் அனுமதி பெறவில்லை என்றாலும், எளிய தொண்டரான எங்களைச் சந்தித்தது மறக்க முடியாத நிகழ்வு..

**– கவிஞர் தூயவன் (எ) ம.ஜ.சந்தீப்,**
**தி.மு.க. தலைமைக் கழக இளம் பேச்சாளர்,**
**குடியேற்றம், வேலூர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல் : youthwing@dmk.in

## கருவூலம்


### அண்ணாவின் அன்பழைப்பு!

1950-ஆம் ஆண்டு செங்கல்பட்டு மாவட்டம், வாலாஜாபாத் .இராஜா திரையரங்கில் மாவட்ட தி.மு.கழகம் சார்பாக, கலைஞரின் 'வேதனைக் குரல்' நாடகம் நடிக்கப்பட்டது. அண்ணாவின் நாடகத்திற்குப் பிறகு, கலைஞரின் நாடகம் நடைபெற்றது இதுவே முதன்முறை. கலைஞர், புலவர் குழந்தையா, கவிஞர் கண்ணதாசன், ஈழத்தடிகள் உள்ளிட்டோர் நடித்தனர். 'சந்தர்ப்பத்தை இழக்காமல் வந்து நாடகத்தை காணுங்கள்' என 'திராவிட நாடு' ஏட்டில் 'அன்பழைப்பு' என்ற தலைப்பிலே அழைப்பு விடுத்தார் அண்ணா.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

719

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24-26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131